**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 06.06.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, நாட்டின் எல்லா பகுதிகளும் தற்போது, ரயில்வே கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ரிசர்வ் வங்கி, இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்கள் மீதான ரெப்போ வட்டி விகிதம், 5.5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது.

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வரும் 9ஆம் தேதி புதுச்சேரியில், மாநில சட்டப் பேரவைக்கான தேசிய **e-விதான் செயலி**யை தொடக்கி வைக்கிறார்.

வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் பிரச்சார இயக்கம், இன்று புதுச்சேரியில், கொடாத்தூர், மணவெளி, குமாரபாளையம், சேந்தநத்தம், சுத்துக்கேணி உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்றது.

---

*மோடி-காஷ்மீர்* (12)

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, நாட்டின் எல்லா பகுதிகளும் தற்போது, ரயில்வே கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இன்று ஜம்மு-காஷ்மீரின் பத்ரா பகுதியில், செனாப் ஆற்றுப் பாலம் மற்றும், அஞ்சி கட் பாலத்தை திறந்து வைத்து பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார். இவ்விழாவின் போது, மொத்தம் 46 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். வைஷ்ணோ தேவி கோவிலுக்கு செல்லும் பக்தர்களுக்கான 2 வந்தே பாரத் ரயில்களையும் அவர் கொடியசைத்து தொடக்கி வைத்தார். புதிய திட்டங்களால், ஜம்மு-காஷ்மீரின் வளர்ச்சிக்கு, பதிய உத்வேகம் கிடைக்கும் என்றும், செனாப், மற்றும், அஞ்சி கட் பாலங்கள், ஜம்மு-காஷ்மீரின் வளத்திற்கான தலைவாசலாகத் திகழும் என்றும், பிரதமர் கூறினார்.

---

*பதினோராம் ஆண்டு 1 (8)*

இந்தியா, கடந்த 11 ஆண்டுகளில், சேவை, நல்லாட்சி, ஏழைகள் நலன் என்ற கொள்கைகளின் அடிப்படையில், புரட்சிகரமான பல மாற்றங்களை சந்தித்துள்ளது. இந்த 11 ஆண்டுகளில், பல்வேறு முக்கிய துறைகளில் அரசு மேற்கொண்ட முக்கிய முயற்சிகள் குறித்து, ஆகாஷ்வாணி சிறப்பு தொடர் ஒன்றை வழங்குகிறது. அந்த வரிசையில், நாட்டின் தொன்மைக் காலப் பெருமிதங்களை புதுப்பித்துக் கொள்ள ஏதுவாக, கலாச்சார மரபுகளை பேணிக் காப்பதில், முக்கிய கவனம் செலுத்தப் பட்டது குறித்து, ஒரு செய்தித் தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*பதினோராம் ஆண்டு 2 (17)*

**(வாய்ஸ்)**

கடந்த 11 ஆண்டுகளில், இந்தியாவின் கலாச்சார மறு எழுச்சி - வளமான பாரம்பரியம், பல்வகை கலை வெளிப்பாடுகள், மற்றும், உலகம் முழுவதையும் எட்டும் நம்பிக்கையுடன், துடிப்பான வண்ணக் கோலமாக மலர்ந்துள்ளது. நாட்டின் நிஜமான சிற்பிகளை கவுரவிக்கவும், அவர்களின் புகழை பேணிக் காத்து, அரசியல் பாகுபாடுகளுக்கு அப்பால் அவர்கள் கொண்டாடப் படுவதை உறுதிப்படுத்தவும், அரசு முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்திய சுதந்திரத்தின் 75ஆம் ஆண்டை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட, ஆசாதி கா அம்ரித் மகோத்சவம், நாடு முழுவதும் நடைபெற்ற பல்வேறு கலாச்சார மற்றும் தேசப்பற்று நிகழ்ச்சிகள் மூலம், நாட்டின் தியாகங்களையும், சாதனைகளையும் கொண்டாடியது. பிரதமர் அருங்காட்சியகம், தேசிய போலீஸ் நினைவகம், பழங்குடி விடுதலைப் போராட்ட வீரர் நினைவகம் உட்பட பல்வேறு நீண்டகால நிலுவைத் திட்டங்களும், பாரத் மண்டபம், மற்றும், புதிய நாடாளுமன்றக் கட்டிடமும் கட்டி முடிக்கப் பட்டு, தேசிய ஒற்றுமையின் பெருமைமிகு அடையாளங்களாக மாறி உள்ளன. ஒரே பாரதம்-உன்னத பாரதம் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட காசி தமிழ் சங்கமம் போன்ற நிகழ்வுகளும், சாதனை அளவில் 66 கோடி பக்தர்கள் கலந்து கொண்ட மகா

*பதினோராம் ஆண்டு 3 (18)*

கும்பமேளாவும், நாடு வேற்றுமையில் ஒற்றுமை காண்பதை கொண்டாடின. பௌத்த உச்சி மாநாடு போன்ற சர்வதேச நிகழ்வுகளும், சீக்கிய குருமார்களின் பிரகாஷ் பர்வ விழாக்களும், இந்தியாவின் ஆன்மீக பாரம்பரியத்தை வலுப்படுத்தின. உலக அளவில 23 கோடி மக்களின் பங்கேற்புடன், 2024ஆம் ஆண்டில் உலக சாதனை படைத்த யோகா, தற்போது பன்னாட்டு இயக்கமாகவே மேம்பட்டு, ஆரோக்கிய வாழ்விற்கான உலகின் குரலாக இந்தியாவை மேம்படுத்தி உள்ளது. ஆயுர்வேதமும், முழுமையான ஆரோக்கியத்திற்கான உலகக் கேந்திரமாக இந்தியாவை நிலை நிறுத்தி வருகிறது. ஆயுஷ் துறையில், பல்வேறு நாடுகளுடன் 24 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், பிரத்யேக விசாக்கள், உலக சுகாதார அமைப்புடன் கூட்டாண்மை, மற்றும், உலக அளவிலான உயர்க் கல்வி நிறுவனங்களில் தனி இருக்கை போன்ற ஏற்பாடுகள் மூலம், இந்தியாவின் ஆயுர்வேதம், உலக நாடுகளில் அங்கீகாரம் பெற்று வருகிறது. யுனெஸ்கோ உலக மரபுச் சின்னங்களின் பட்டியலில், இந்தியாவைச் சேர்ந்த 43 மரபுச் சின்னங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தியாவின் மேலும் 63 மரபுச் சின்னங்கள், இதற்கான உத்தேசப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன. ஊடகம் மற்றும் கேளிக்கைத் துறைக்கான வேவ்ஸ் உச்சி மாநாடு போன்ற நிகழ்வுகளால், இத்துறையில்

*பதினோராம் ஆண்டு 4 (4)*

இந்தியாவின் திறன்கள், உலக அரங்கிற்கு உயர்ந்துள்ளன. பாரம்பரிய கலைகளை பேணிக் காக்கவும், மத்திய அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. புதுச்சேரியைச் சேர்ந்த, பத்மஸ்ரீ விருது பெற்ற தவில் இசைக் கலைஞர் திரு. தட்சணாமூர்த்தி இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசுகையில்…

**(வாய்ஸ்-தட்சணாமூர்த்தி)**

*பதினோராம் ஆண்டு 5 (4)*

இசை மற்றும் கலை முதல், யோகா மற்றும் திருவிழாக்கள் வரை, இந்தியக் கலாச்சாரம் தற்போது, பல நாடுகளில் பார்க்கப்பட்டு, மதிக்கப்படுகிறது. இந்தியாவின் வளமான பாரம்பரியம், உள்நாட்டில் ஒளிர்வதற்கு அப்பாற்பட்டு, உலகெங்கிலும் பிரகாசத்தை பரப்பி வருகிறது.

---------------------------

*ரிசர்வ் வங்கி (13)*

ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கைக் குழு, இதர வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கியால் வழங்கப்படும் குறுகிய கால கடன்கள் மீதான ரெப்போ வட்டி விகிதத்தை, 5.5 சதவிகிதமாக, 50 அடிப்படைப் புள்ளிகள் குறைத்து அறிவித்துள்ளது. ரிசர்வ் வங்கி

ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா, பணக் கொள்கைக் குழுவின் கூட்டத்திற்கு பின்னர் இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் இதை அறிவித்தார். வளர்ச்சியைத் தூண்டும் அதே வேளை, **நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்** அடிப்படையிலான பணவீக்கத்தை, ஏறத்தாழ 4 சதவிகித அளவில் கட்டுப் படுத்துவதான, **நடுத்தர கால இலக்கை** எட்ட ஏதுவாக, வட்டி விகிதம் குறைக்கப் படுவதாக அவர் கூறினார். நடப்பு நிதியாண்டில், பணவீக்கம் பற்றிய ரிசர்வ் வங்கியின் கணிப்பு, 4 சதவிகிதத்தில் இருந்து 3 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதாகவும், வளர்ச்சி விகிதம் பற்றிய கணிப்பு.6.5 சதவிகிதமாக ஏற்கனவே உள்ள அளவில் நீடிப்பதாகவும், ரிசர்வ் வங்கி ஆளுநர் தெரிவித்தார்.

**--------------------------**

*எல். முருகன்-புதுச்சேரி* 1 (6)

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வரும் 9ஆம் தேதி புதுச்சேரியில், மாநில சட்டப் பேரவைக்கான தேசிய e-விதான் செயலியை தொடக்கி வைக்கிறார். துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மற்றும், சட்டமன்ற உறுப்பினர்கள் இவ்விழாவில் பங்கேற்க உள்ளனர். இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு….

**(வாய்ஸ்)**

*எல். முருகன்-புதுச்சேரி* 2 (15)

**(வாய்ஸ்)**

புதுச்சேரியில் அண்மையில் முடிவடைந்த, 15ஆவது சட்டமன்றத்தின் 6ஆவது கூட்டத் தொடரின் போது, துணை நிலை ஆளுநர் உரை, முதலமைச்சரின் பட்ஜெட் உரை, அவையின் அலுவல் பட்டியல்கள், மற்றும், உறுப்பினர்களின் கேள்விகளுக்கான அரசின் பதில்கள், தேசிய e-விதான் செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, பரிசோதிக்கப் பட்டது. e-விதான் செயலியின் பயன்பாடு குறித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசுத் துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் பணிகளும் ஏற்கனவே தொடங்கி உள்ளன.

ஒரே நாடு-ஒரே செயலி என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின்படி, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சகம் மூலம் தயாரிக்கப்பட்ட தேசிய e-விதான் செயலி, 28 மாநில சட்டமன்றங்களில் ஏற்கனவே பயன்படுத்தப் படுவதும், புதுச்சேரியில் இந்த செயலியின் பயன்பாடு தொடங்கியவுடன், மாநில சட்டமன்றம், காகித பரிமாற்றம் இல்லாத, முழுமையான டிஜிட்டல் அவையாக மேம்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**--------------------------**

விக்சித் கிரிஷி (12)

வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் கிரஷி சங்கல்ப அபியான்- பிரச்சார இயக்கம், இன்று புதுச்சேரியில், கொடாத்தூர், மணவெளி, குமாரபாளையம், சேந்தநத்தம், சுத்துக்கேணி உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்றது. கால்நடை பராமரிப்புத் துறை நிபுணர் டாக்டர் பி.டி. சித்ரா மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் வித்யா ராஜேந்திரன் உள்ளிட்டோர், கால்நடை வளர்ப்பு, தீவன நிர்வாகம், மீன் வளர்ப்பு, மீன் கழிவு மேலாண்மை குறித்தும், மண் வள அட்டையின் முக்கியத்துவம் குறித்தும், விழிப்புணர்வு தகவல்களை விவசாயிகளுக்கு வழங்கினர். 191 பெண் விவசாயிகளும், 136 ஆண் விவசாயிகளும், இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். காரைக்காலில், நிரவி, திருவேட்டகுடி, மற்றும், விழுதியூரில், இதேப் போன்ற பிரச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

---------------------------

ரெட்டியார் (8)

புதுச்சேரியில் முன்னாள் முதலமைச்சர் வெங்கடசுப்பா ரெட்டியார் நினைவு நாளான இன்று, அன்னாரின் சிலைக்கு, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி ஆகியோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். சுயமரியாதைச் சுடர் எம்.ஏ ஷண்முகம் நினைவு நாளும் இன்று அனுசரிக்கப் படுவதை ஒட்டி, அன்னாரின் சிலைக்கும், அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் உள்ளிட்டோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

---------------------------

வானிலை (10)

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரியிலும், மேலும் சில நாட்களுக்கு, லேசானது முதல் மிதமான மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. வரும் 10ஆம் தேதி, கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 8ஆம் தேதி வரை, ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை, இயல்பை விட 2 முதல், 3 டிகிரி வரை அதிகமாக பதிவாகலாம் என்றும்,

வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் நிலையில், அசௌகரியம் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*அனைத்துக் கட்சி* (12)

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் வலுவான நிலைப்பாடுகளை, உலக அளவில் எடுத்துக் கூறுவதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்ட 7 அனைத்துக் கட்சி பிரதிநிதிக் குழுக்களில், பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர், பெல்ஜியத்தில் இருந்து, ஜெர்மனி சென்றடைந்துள்ளனர். காங்கிரஸ் எம்.பி திரு. சசிதரூர் தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழுவினர், தங்கள் பயணத்தின் கடைசி கட்டத்தில், நேற்றிரவு வாஷிங்டன்னில், அமெரிக்க துணை அதிபர் திரு. ஜே.டி. வான்சை சந்தித்தனர். அமெரிக்கா மற்றும் இதர நாடுகளுக்கான தங்களின் பயணத்தை, இருதரப்பு உறவுகள் மீதான இந்தியாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வாய்ப்பாகவும் தாங்கள் பயன்படுத்திக் கொண்டதாக, திரு. சசிதரூர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, நாட்டின் எல்லா பகுதிகளும் தற்போது, ரயில்வே கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ரிசர்வ் வங்கி, இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்கள் மீதான ரெப்போ வட்டி விகிதம், 5.5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது.

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வரும் 9ஆம் தேதி புதுச்சேரியில், மாநில சட்டப் பேரவைக்கான தேசிய **e-விதான் செயலி**யை தொடக்கி வைக்கிறார்.

வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் பிரச்சார இயக்கம், இன்று புதுச்சேரியில், கொடாத்தூர், மணவெளி, குமாரபாளையம், சேந்தநத்தம், சுத்துக்கேணி உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்றது.